156—

வெற்றிலை ஆராய்ச்சி மையம்

***4373—திரு. கே.எஸ். சரவணக்குமார்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *பெரியகுளம் தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, பெரியகுளம் பகுதியில் பரவலாகக் கருப்பு மற்றும் வெள்ளை என இரண்டு இரக வெற்றிலைகளை விவசாயிகள் பயிரிடுகிறார்கள். இந்த வெற்றிலைகள் மருத்துவக் குணம் கொண்டவை. இதில் வீரியமிக்க நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட சவிக்கால் எனும் பொருள் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வெற்றிலையை மேலும் மருத்துவத் துறைகள் பயன்படுத்த ஏதுவாக, பெரியகுளம் பகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வெற்றிலை பயிரிடும் பரப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் அளவுக்குத்தான் வெற்றிலை பயிர் செய்கிறார்கள். ஆங்காங்கு அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற ஆராய்ச்சி மையங்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலமாக அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பகுதிகளில் தேவைக்கேற்ப புதிய இரகங்களை அவை உற்பத்தி செய்கின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக ஆராய்ச்சி மையம் ஆரம்பிக்கப்பட்டது. ஏனென்றால், கடந்த ஆட்சிக் காலத்தில் தேவையான வெற்றிலை பயிர்கள் பயிரிட இயலாத நிலை இருந்தது. அந்தக் காலத்தில் இரண்டு வெற்றிலை இரகத்தை அவர்கள் ஆராய்ச்சி செய்து, கண்டுபிடித்து, மக்களுடைய பழக்கவழக்கத்திற்குக் குறைவாகவே வந்திருக்கிறது. புதிய ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு கிட்டத்தட்ட 50 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது; கூடுதலாகச் செலவினமும் ஏற்படும். அதற்குத் தேவை தற்போது குறைவாக இருக்கின்ற காரணத்தினால், முடிக்கப்பட்டது. மீண்டும் வேண்டுமென்றால், எதிர்காலத்தில் தேவைக்கேற்ப அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட லால்பேட்டை பகுதியில் விளைகிற வெற்றிலை மிகுந்த மருத்துவக் குணமுடையது. ஆகவே, அந்தப் பகுதியில் ஆராய்ச்சி மையத்துடன்கூடிய ஒரு தோட்டக்கலைக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவிலில் ஒரு காலத்தில் லால்பேட்டை, நத்தமலை போன்ற பகுதிகளில்

2022 ஏப்ரல் 22]

அதிக அளவு வெற்றிலை பயிர் செய்யப்பட்டது. அது தற்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. அவை தற்போது ஏக்கர் கணக்கில்கூட இல்லை. வெற்றிலை பயிர் என்பது வாழை போன்ற பயிர்களுக்கு support *ஆக ஊடு பயிராகத்தான் இருந்து வருகிறது. இருந்தாலும், லால்பேட்டை வெற்றிலை, தஞ்சாவூர் வெற்றிலை, கும்பகோணம் வெற்றிலை என்றால், ஒரு காலத்தில்* famous*–ஆக இருந்தது. இப்போது வெற்றிலை போடுகின்ற பழக்கம் வெகுவாக இளைஞர்கள் மத்தியில் குறைந்துவிட்டது. ஒரு காலத்தில் வெற்றிலை–பாக்கு இல்லாவிட்டால் சாப்பிட மாட்டார்கள்; ஒரு விருந்துக்குச் சென்றால், அங்கு வெற்றிலை–பாக்கு முக்கியமாக, கட்டாயம் இருக்கும். தற்போது வெற்றிலை–பாக்குக்குப் பதிலாக பீடா வந்துவிட்டது;* Sweet *பீடா என்று சொல்கிறார்கள். அதுவும் இப்போது தடை செய்யப்பட்டு வரக்கூடிய ஒரு சூழ்நிலையில், வெற்றிலை பயன்பாடு இப்போது குறைவாக இருக்கின்றது. இருப்பினும் வெற்றிலை ஆராய்ச்சி மையத்தின் தேவையிருக்கின்றது என்றால், அந்தப் பகுதியின் அருகில், விருத்தாசலத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலமாக ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கொடிகால் விவசாயம் என்பது, பரவலாகக் குறைந்து வந்தாலும், தஞ்சை மாவட்டத்தில், 3 வகையான வெற்றிலை பயிர்களை பயிரிடுகிறார்கள். பச்சைக் கொடி, வெள்ளைக் கொடி, கற்பூர வள்ளி ஆகிய மூன்று வகையான வெற்றிலையைப் பயிரிடுகிறார்கள். அதிலே ஊடுபயிராக மரம் வளர்ப்பதற்காக கடந்த ஆண்டு எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் அகத்தி, செம்பை விதைகள் கிடைக்காமல், அது குறித்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, அதற்கான விதை கிடைக்கின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

வேளாண் துறையின்மூலம் வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு அரசு ஓர் ஆதரவான நிலையை எடுக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மற்ற பயிர்களுக்கு நாம் support செய்கிறோம். ஆனால், வெற்றிலை விவசாயம் குறைந்து வருகிறது. அதற்கு துறையின்மூலம் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிலைச் சாகுபடியை ஊக்கப்படுத்துவதற்கு நம்முடைய அரசால் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது ஒரு எக்டேருக்கு ரூ.10,000/– வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒரு எக்டேருக்கு ரூ.10,000/– வீதம் 100 எக்டேருக்கு ரூ.10,00,000/– நிதியுதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 278 விவசாயிகள் பயன்பெற்றிருக்கின்றார்கள். ஒரு தனி விவசாயி, வெற்றிலைப் பயிரை அதிகமான நிலப்பரப்பில், ஏக்கர் கணக்கில், காணி கணக்கில் விளைவிக்க முடியாது. ½ ஏக்கர் அல்லது ¼ ஏக்கர் நிலத்தில்தான் அதனை விவசாயம் செய்ய முடிகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதுபோக, வெற்றிலையைப் பயிரிடும்போது, அகத்திக் கீரை அல்லது வாழையை ஊடு பயிராகப் பயிரிடுவார்கள். அவ்வாறு செய்து, விவசாயிகள் சமாளித்துக்கொள்வார்கள். வெற்றிலைச் சாகுபடிக்கு அதிகப்படியான விவசாயத் தொழிலாளர்கள் தேவை. வெற்றிலைச் சாகுபடி செய்வதென்பது சாதாரணமான தொழில் அல்ல. அந்தத் தொழில் செய்கின்ற அனுபவமுள்ள ஆட்கள், விவசாயத் தொழிலாளர்கள் தேவை. இதில் இவ்வளவு சவால்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சமாளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும்போதுதான், நாம் வெற்றிலையை முழுமையாக பயிர் செய்ய முடியும். அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வெற்றிலைச் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக ஒரு எக்டேருக்கு ரூ.10,000/– மானியம் அறிவித்து, கிட்டத்தட்ட 278 விவசாயிகள் பயன்பெற்றிருக்கின்றார்கள். எனவே, வெற்றிலைப் பயிர் செய்வதற்கு பிற்காலத்தில் அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.